

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 49 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 11 – வெள்ளிக்கிழமை 27 செப்டம்பர் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 49: Thiruvalluvar Year - 2055 - Purataasi 11 - Friday 27 September 2024 - Dak 12 Pages ₹ 5.00


## உன் தியாகம் பெரிது - உறுதி அதனினும் பெரிது ! சிறையிலிருந்து

# முன்னிலும் உரம் பெற்றவராய் வெளியில் வருகிறார் செந்தில் பாலாஜி !

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்று மகிழ்ச்சி !

**சென்னை, செப். 27-**

**கரூர் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜிக்கு உச்சநீதி மன்றம் ஜாமீன் வழங்கியதைத் தொடர்ந்து தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட வலைதளப்பதிவில், “உன் தியாகம் பெரிது, உறுதி அதனினும் பெரிது! சிறையிலிருந்து முன்னிலும் உரம் பெற்றவராய் வெளியில் வருகிறார் சகோதரர் செந்தில்பாலாஜி. அவரை வருக! வருக! என வரவேற்கிறேன்” என மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.**



சட்ட விரோத பணப்பரிமாற்றம் செய்ததாக குற்றம் சாட்டி கடந்த ஜீன் மாதம் 14ஆம் தேதி அமைச்சராக இருந்த செந்தில்பாலாஜியை ஒரு தீவிரவாதியைப் போன்று மிகவும் அராஜக முறையில் அமலாக்கத் துறையினர் கைது செய்தனர். இதனையடுத்து அமைச்சர் பதவியை ராஜினாமா செய்த செந்தில்பாலாஜி கடந்த 15 மாதங்களுக்கும் மேலாக விசாரணைக் கைதியாக சிறையில் இருந்து வந்தார்.

செந்தில்பாலாஜியின் ஜாமீன் மனுவை சென்னை உயர்நீதி மன்றம் பலமுறை தள்ளுபடி செய்தது. இதனையடுத்து கடந்த மார்ச் மாதம் உச்சநீதி மன்றத்தில் செந்தில்பாலாஜி மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்தார். உச்சநீதி மன்றத்தில் செந்தில்பாலாஜிக்கு ஜாமீன் வழங்கக் கூடாது என அமலாக்கத்துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.

செந்தில்பாலாஜி சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், “செந்தில்பாலாஜி கடந்த ஆண்டு ஜீன் மாதம் சட்டத்திற்குப் புறம்பாக அமலாக்கத்துறையினரால் கைது செய்யப்பட்டார். அதற்குப் பிறகு அவரது உடல் நிலை பாதிக்கப்பட்டு இதய அறுவை சிகிச்சை செய்து கொண்டார். இருந்தும் தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டார். முகாந்திரமே இல்லாத இந்த வழக்கில் அமலாக்கத்துறை என்ன விசாரிக்கிறார்கள் என்றே எதுவும் தெரியவில்லை. எப்போது விசாரணை முடியும் என்றே தெரியவில்லை. அவரது உடல் நிலையைக் கருத்தில் கொண்டு இந்த வழக்கில் செந்தில்பாலாஜிக்கு ஜாமீன் வழங்க வேண்டும்” என வாதிட்டனர்.

இந்த வாதங்களைப் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் கடந்த ஆகஸ்ட் 20ந் தேதி தள்ளி வைத்தனர்.

இந்த வழக்கின் விசாரணை நேற்று (26.9.2024) உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் அபஸ் எஸ்.ஓஹா மற்றும் அகஸ்டின் ஜார்ஜ் மாயிஷ் ஆகியோர் கொண்ட அமர்வில் நடைபெற்றது. விசாரணையில் உச்சநீதி மன்ற நீதிபதிகள் செந்தில்பாலாஜிக்கு நிபந்தனைகளுடன் கூடிய ஜாமீனை வழங்கினர்.

உச்சநீதிமன்றம் செந்தில்பாலாஜிக்கு ஜாமீன் வழங்கியதை வரவேற்று தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.09.2024), வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**“ஆருயிர்ச் சகோதரர் வி.செந்தில் பாலாஜி அவர்களுக்கு 471 நாட்களுக்குப் பிறகு, உச்சநீதிமன்றத்தால் பிணை கிடைத்திருக்கிறது.**

**அமலாக்கத் துறையானது, அரசியல் எதிரிகளை ஒடுக்கும் துறையாக மாற்றப்பட்ட தற்போதைய சூழலில், அதற்கு உச்சநீதிமன்றம் ஒன்றே விடியலாக இருக்கிறது.**

**எமர்ஜென்சி காலத்தில்கூட இவ்வளவு நாட்கள் சிறை வாழ்க்கை கிடையாது. அரசியல் சதிச் செயல்கள் 15 மாதங்கள் தொடர்ந்தன.**

**கைது செய்து சிறையிலேயே வைத்து விடுவதால் சகோதரர் செந்தில் பாலாஜியின் உறுதியைக் குலைக்க நினைத்தார்கள்.**

**முன்னிலும் உரம் பெற்றவராய்ச் சிறையில் இருந்து வெளியில் வரும் சகோதரர் செந்தில் பாலாஜியை வருக! வருக! என வரவேற்கிறேன்.**

**உன் தியாகம் பெரிது! உறுதி அதனினும் பெரிது!”**

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## கரூர் மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர்

# வி.செந்தில் பாலாஜிக்கு ஜாமீன் !

## அமலாக்கத்துறை தொடர்ந்த வழக்கில் – உச்சநீதிமன்றம் உத்தரவு !

## 471 நாட்கள் சட்டப் போராட்டத்திற்குப் பிறகு சிறையிலிருந்து வெளியில் வந்தார் !

**புதுடெல்லி, செப். 27-**

**சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் கரூர் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜிக்கு உச்ச நீதிமன்றம் ஜாமீன் வழங்கியுள்ளது. பல்வேறு நிபந்தனைகளுடன் இந்த ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.**

சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி ஜாமீன் கோரி, உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் நீதிபதிகள் அபய் எஸ்.ஓஹா, அகஸ்டின் ஜார்ஜ் மாயிஷ் அமர்வு நேற்று (செப்.26) இந்தத் தீர்ப்பினை வழங்கியுள்ளது. இதனையடுத்து 15 மாதங்களுக்குப் பின்னர் செந்தில் பாலாஜி பிணையில் விடுதலையாகும் நிலை உருவாகியுள்ளது.

### வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ கருத்து!

உச்ச நீதிமன்றத் தீர்ப்பு குறித்து செந்தில் பாலாஜி தரப்பு வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ ஊடகப் பேட்டியில் கூறுகையில், “செந்தில் பாலாஜி கடந்த 15 மாதங்களுக்கும் மேலாக விசாரணைக் குற்றவாளியாகவே இருந்ததால் அடிப்படை உரிமையைக் கருத்தில் கொண்டு அவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது. வழக்கின் விசாரணைக்கு இன்னும் நீண்ட காலம் எடுக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.



ஜாமீனுக்காக செந்தில் பாலாஜிக்கு ரூ.25 லட்சம் மதிப்பில் இரண்டு பேர் ஜாமீன் உத்தரவாதம் வழங்க வேண்டும், திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அமலாக்கத் துறை அலுவலகத்தில் செந்தில் பாலாஜி ஆஜராகி கையெழுத்திட வேண்டும், சாட்சிகளைக் கலைக்கக் கூடாது, வழக்கில் வாய்தா கேட்கக் கூடாது என்பன போன்ற நிபந்தனைகள் உச்ச நீதிமன்றம் விதித்துள்ளது” என்றார்.

### ‘அமைச்சராகத் தடை இல்லை’

வி.செந்தில் பாலாஜி மீண்டும் அமைச்சராவது தொடர்பாக உச்ச நீதிமன்றம் ஏதேனும் நிபந்தனை விதித்துள்ளதா என்ற செய்தியாளர்கள் கேள்விக்கு, “அதுமாதிரியான எவ்வித நிபந்தனையும் விதிக்கப்படவில்லை. செந்தில் பாலாஜி மீண்டும் அமைச்சராவதற்கு எத்தகைய சட்டபூர்வ தடையும் இல்லை” என்று வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தெரிவித்தார். மேலும் அவர், “இந்தத் தீர்ப்பின் மூலம் அரசியலமைப்பே பிரதானமானது என்று உச்ச நீதிமன்றம் நிறுவியுள்ளது” என தெரிவித்தார்.

சட்டவிரோத பணப்பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ளதாகக் கூறி அவரை அமலாக்கத் துறை அதிகாரிகள் கடந்த ஆண்டு ஜீன் 14ம் தேதி கைது செய்தனர்.

ஏற்கெனவே செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனுக்களை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றமும், சென்னை உயர் நீதிமன்றமும் தள்ளுபடி செய்துவிட்ட நிலையில், ஜாமீன் கோரி செந்தில் பாலாஜி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை முடிவுற்ற நிலையில், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அபய் எஸ்.ஓஹா, அகஸ்டின் ஜார்ஜ் ஆகியோரைக் கொண்ட அமர்வு நேற்று (செப்.26) அவருக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளது.

அப்போது, குறிப்பிட்ட நீதிபதிகள் செந்தில்பாலாஜி நீண்ட நாட்களாக சிறையில் இருப்பதைக் கருத்தில் கொண்டு ஜாமீனில் விடுவிப்பதாகக் கூறினர்.

இதனையடுத்து உச்ச நீதிமன்ற உத்தரவு முறையாக சமர்ப்பிக்கப்பட்டு அதன் பின்னர் செந்தில் பாலாஜி சென்னை புழல் சிறையில் இருந்து விடுதலையானார்.

செந்தில்பாலாஜி ஜாமீனில் விடுவிக்கப்பட்டதையடுத்து கரூரில் கழகத்தினர் திரண்டு வெடிகள் வெடித்துக் கொண்டாடி மகிழ்ந்தனர்.